# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/50 - 2021 ඔක්තෝබර් මස 16 වැනි සෙනසුරාදා - 2021.10.16

*2249/50 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி கட்டளைச் சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல. 10/ 2021**

பாதுகாப்பு இயல்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக்கூறுகள் முகாமை முறைமை

திருத்தப்பட்டவாறான, மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய 2241/ 3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 2216/ 16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 07/ 2021 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட விதிகளைப் பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

விதி இல. 3 இல்,

(அ) முதலாம் காப்பு வாசகத்தில் குறிப்பிடப்பட்ட “2021, ஒற்றோபர் 15 ஆந் திகதிக்குப் பின்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக “2022, சனவரி 03 ஆந் திகதிக்குப் பின்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்தல், மற்றும்

(ஆ) இரண்டாம் காப்பு வாசகத்தின் “2021, ஒற்றோபர் 01 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்குப் பதிலாக “2022, ஏப்பிறல் 01 ஆந் திகதிக்கு முன்னர்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்தல்.

பசில் ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, ஒற்றோபர் 16.

*10-552*